நூற்றுக்கு நூறு உரிமை கொடுத்துவிட்டு, பாதி உரிமையைத்தான் ஆண்கள் வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அந்த முறையிலேதான் இந்த ஏற்பாடுகள் செய்யவேண்டியிருக்கிறது.

Non-Clinical Professors working in Medical Colleges

* 14. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that a number of Non-Clinical Professors working in Medical Colleges in the State have reached stagnation in their salary ; and

(*b*) if so, whether there is any proposal with the Government to revise their scale of pay ?

மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மருத்துவப் பணியாற்ருத பேராசிரியர்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மருத்துவப் பணியாற்ருத பேராசிரியர்கள் (Non-Clinical Professors) பலர் சம்பள வீத வகையில் தேக்க நிலையை (Stagnation) அடைந்துள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவர்களது சம்பள வீதத்தை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம். (இ) இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: இதுபோன்ற 'நான்-கிளினிகல் ப்ரொஃபசர்ஸ்' எவ்வளவு பேர் இருக்கிருர்கள்? இவர்களில் தேக்க நிலையில் உள்ளவர்கள் எவ்வளவு ஆண்டுக் காலமாக எவ்வளவு ஊதியம் பெறுகிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கடந்த மார்ச் திங்கள் வரையில் 16 பேர் இந்த நிலைக்கு ஆளாகியிருக்கிருர்கள். அவர்களுடைய ஊதியம் 1,300 ரூபாய். தேக்க நிலை எறடுகிறவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை உயர்வு அளிக்கலாம் என்று அரசாங்கத்தாலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது ஆயிரம் ரூபாய் உச்ச ஊதியம் வருகிற அளவுதான் இந்த ஸ்டாக்னேஷன் (Stagnation) ஊதிய உயர்வு வழங்குவது என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இரண்டாவது, ப்ரொஃபசர் போன்ற பதவியிலே உள்ளவர்கள் இன்னும் பல பேர் இரண்டு ஆண்டுகளிலே இந்த நிலைக்கு வரக்கூடும். அப்படி வருகிறபோது, தனித் தனியாக ஸ்டாக்னேஷன், அதற்கு ஒரு விதிவிலக்கு, ஆயிரம் ரூபாய்க்கு மேலே சம்பளம் வாங்குகிறவர்களைப் பற்றிப் பரிசீலிப்பது என்பது இயலாத காரியம்.

மாருக ஒரு வேளை கல்லூரிக் கல்விக்காக சில மாற்றங்கள் ஏற்படுகிற போது, மருத்துவக் கல்வியினுடைய நிலையை வைத்து பேராசியரிர் முதலானோர் குறித்து தகுதி உயர்வுகள் ஏற்டுமேயானால் அப்போது சில மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஆயிரம் ரூபாய் வரை ஊதியம் பெறுகிறவர்களில் தேக்க நிலையில் உள்ளவர்களுக்கு இரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை ஊதிய உயர்வு கொடுக்கிறார்கள். எப்பொழுது அது நிர்ணயம் செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் விலைவாசி சென்ற ஆண்டிலே 25 சதவிகிதம் உயர்ந்திருக்கிற போது, குறைந்தது 1,500 ரூபாய் வரை ஊதியம் உள்ளவர்களுக்கும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை 50 ரூபாய் தேக்க ஊதியத்தைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4–10)

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொதுவாக எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், அதிலே விலைவாசி ஏற்றத்தைப்பற்றிக் குறிப்பிடுவதென்பது கேள்வி நேரத்தில் மரபாகிவிடுமோவென்று அஞ்சுகிறேன். இப்போது, விலைவாசி குறைந்திருக்கிறது. கேள்வி கேட்கின்றபோது, அது நியாயமாக இருக்கலாமே தவிர, விடை சொல்லும்போது அது பொருத்தமாக இல்லை.

Water Supply Scheme for the Udayarpalayam Town Panchayat.

* 15 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any action has been taken to implement the Water Supply Scheme for the Udayarpalayam Town Panchayat in Tiruchirappalli District ; and

(*b*) if so, the name of the scheme under which such action has been proposed to be taken ?

உடையார்பாளையம் பேரூராட்சி குடிநீர் திட்டம்.

திரு. எல். பலராமன், (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) திருச்சி மாவட்டத்தில் உள்ள உடையார்பாளையம் பேரூராட்சி குடிநீர் திட்டம் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(இ) ஆமெனில் எந்தத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) ஜெயங்கொண்டம் பேரூராட்சி குடிநீர் திட்டத்திற்கான குழாய் வழிப்பாதையில் துணைக்குழாய்